**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 9/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W-2 |
| Name | : | மணிகண்டன், வயது 43 |
| Father Name/Husband Name | : | அய்யர் |
| Village | : | ஆவாரம்பட்டி |
| Taluk | : | திண்டுக்கல் |
| Calling | : | செண்டரிங் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of March 2024.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஆவாரம்பட்டியில் வசித்து செண்டரிங் வேலை செய்கிறேன். எதிரியை தெரியும் எங்கள் உரைச்சேர்ந்தவர். அ.சா.1 எனது உறவினர். சுமார் 6 மாதங்களுக்கு முன்பு இரவு 09.00 மணியளவில் கட்டாலங்குளம் அருகே உள்ள பாலத்தில் வேலை பார்க்கும் இடத்தில் அ.சா.1 ற்கும் எதிரிக்கும் சண்டை நடந்தது.
2. நாங்கள் தூங்கிக்கொண்டிருந்தோம். எழுந்து வந்து பார்த்த போது அவருக்கு தலையில் காயத்துடன் இருந்தார். பின்னர் அவர் முகத்தை கழுவி தங்காபண்டி வண்டியில் ஏற்றி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் ஞாயிற்று கிழமை என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதியில் பால பணி மாலை 04.00 மணிக்கு முடிந்துவிடும் என்றால் சரிதான். நீங்கள் மாலை பணி முடிந்த உடன் சமைத்து சாப்பிட்டுவிட்டு இரவு 08.30 மணியளவில் தூங்கிவிடுவீர்கள் என்றால் சரிதான்.
2. சம்பவ தேதியிலும் நீங்கள் தூங்கிவிட்டீர்கள் என்றால் சரிதான். சண்டை எப்படி நடந்தது என்பது பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் நான் சத்தம் கேட்டு தான் வந்து பார்த்தேன். தங்காபண்டி என்பவரும் உங்களுடன் தான் தூங்கிக்கொண்டிருந்தார் என்றால் சரிதான்.
3. நீங்கள் தகவல் சொன்ன பிறகு தான் அவருக்கும் தகவல் தெரியும்

என்றால் நான் போகும் முன்னர் அவர் அங்கு தான் இருந்தார். அ.சா.1 ற்கு ஏற்பட்ட காயம் பால வேலை நடக்கும் இடத்தில் தவறி விழுந்ததால் தான் ஏற்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது, சம்பத்தன்று சண்டை நடந்து இரத்தத்துடன் வந்தது தான் தெரியும்.

4. கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு நீங்கள் அரை மணிநேரத்தில் வந்துவிட்டீர்கள் என்றால் அரை மணி முதல் முக்கால் மணிநேரம் ஆகியிருக்கும். காயம்பட்ட அ.சா.1 மயக்க நிலையில் தான் இருந்தார் என்றால் சரிதான். போலிசார் மருத்துமனைக்கு உடனடியாக வந்துவிட்டார்களா என்றால் சிகிச்சைக்கு சேர்த்த அரைமணிநேரத்தில் வந்துவிட்டார்கள்.
5. போலிசார் வந்த போது அ.சா.1 மயக்கநிலையில் இருந்ததால் என்ன நடந்தது என்று தங்காபண்டியிடம் கேட்டு புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் அது தங்காபண்டிக்கு தான் தெரியும். தங்காபண்டிக்கும் எதிரியின் தம்பிக்கும் தூத்துக்குடியில் வைத்து சண்டை நடந்தது என்றால் ஆம். தங்காபண்டியும் அ.சா.1 ம் என்ன உறவு முறை என்றால் மாமா மச்சான்முறை.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.